# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.II, Mettur

**Case No : C.C. 283/2023**

**Prosecution witness : அ.சா. 5** **Date : 17.02.2026.**

| | |
|---|---|
| **Name : சந்திரசேகர்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

1) போலீசார் வழக்கு சம்மந்தமாக விசாரித்த போது நேரடியாக மருத்துவமனையில் சென்று பார்த்ததாக சொன்னேனா என்றால் இல்லை. சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை மருத்துவமனைக்கு தான் நான் சென்றதாக போலீசார் சொல்லியிருந்தால் அது தவறானதாகும். பேஷன் புரோ வாகனத்தின் எந்த பாகத்தில் டிவிஎஸ் வாகனத்தின் எந்த பாகம் மோதியது என்றால் ஸ்கூட்டி வாகனத்தின் முன்பகுதி பேஷன் புரோ வாகனத்தின் இடது பக்கம் மோதியது.

2) சம்பவம் நடந்த போது யார் யார் இருந்தார்கள் என்றால் நான் டீ கடை முன்பாக நின்று கொண்டிருந்தேன். படார் என்று சத்தம் கேட்டது. நான் கூட்டத்தை விலக்கி விட்டு நான் சென்று பார்த்த போது விபத்து ஏற்பட்டு கிழே கிடந்தார்கள். விபத்தில் அடிப்பட்டது என் அக்கா மகன் என்று அப்போது தெரிந்து கொண்டேன் என்றால் ஆமாம்.

3) அங்கிருந்தவர்களிடம் கேட்டு விபத்து பற்றி தெரிந்து கொண்டேன். அங்கிருந்தவர்கள் ஆம்புலன்சிற்கு தகவல் சொல்லி ஆம்புலன்ஸ் வந்தது. விபத்தில் அடிப்பட்ட என் அக்கா மகனை ஆம்புலன்சில் ஏற்றி அனுப்பிவிட்டு நான் பின்னால் என் வாகனத்தில் சென்றேன். நான் சத்தம் கேட்டு 5 நிமிடம்

கழித்து சென்று பார்த்தேன். போலீசார் என்னை விசாரிக்கும் போதும் நான் சத்தம் கேட்டு சென்றதாக தான் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம்.

மறுவிசாரணை இல்லை.

Myilswamy Digitally signed by Myilswamy Date: 2026.02.18 10:46:52 +0530